

அமரர்

# தம்பலகாமம் க. வேலாயுதம்

அவர்களின் சிவப்பேறு குறித்து

# நினைவு மலர்

**18-06-2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வீரகேசரிப்பத்திரிகையில் 50
வருடங்களுக்கு மேலாக நிருபராகக்
கடமையாற்றியவரும் கவிதை,
கட்டுரை, வரலாற்றுக்குறுநாவல்,
சமூகக்குறுநாவல், சிறுகதை,
ஆகிய இலக்கிய ஆக்கங்கள்
மூலம் வாசகப் பெருமக்களின்
இதயங்களில் நீங்கா
இடம் பெற்றவருமான
அமரர்
தம்பலகாமம் க. வேலாயுதம்
அவர்கள் இறைவன் திருவடிகளில்
ஆத்ம சாந்தி பெறவேண்டுமென
பிராத்திக்கிறோம்.



இங்ஙனம் தங்களது
அன்பு விழுதுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# தம்பலகாமம் க. வேலாயுதம்
## அவர்கள்

மண்மகிழ் 17-11-1917 | **திதி வெண்பா** | கண்நெகிழ் 19-05-2009

" இரண்டாயிரத்து ஒன்பது விரோதிவருட
வைகாசியில் தசமித்திதி அவிட்ட நட்சத்திரத்தில்
இறைவனடி எய்திய எங்கள் தலைவா
இனிதே! அவர் பாதம் இணை "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் வித்தகர் கனகசபை வேலாயுதம் ஐயா!

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே' என்ற பாரதி பாடலுக்கேற்ப தம்பலகாமத்தில் குஞ்சடப்பன் திடலில் பிறந்து அங்கு வளர்ந்து அங்கு சேவை செய்து கோணேசர் ஆலயத்துக்கும் தொழும்பராய் இருந்து நூல்கள் இயற்றி கிராம முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் உழைத்த மூதறிஞர் பெரியார் வேலாயுதம் ஐயாவின் பிரிவு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். ஐயா 17.11.1917ல் பிறந்தார். 19.05.2009ல் சிவபதமடைந்தார்.

92 வயது வரை இருந்து தொண்டாற்றி இறைவனடிசேர்ந்த பெரியாருக்கு 91 வயது நடக்கும் நான் அனுதாபச் செய்தி எழுத வாய்ப்புக் கிடைத்தது. ஐயா மூத்த ஊடகவியலாளர், வீரகேசரியில் 50 ஆண்டுகளுக்குமேல் நிருபராக இருந்து பணியாற்றினார். கிராம முன்னேற்றம் பற்றி அவ்வப்போது பல கட்டுரைகளை எழுதி முன்னேற்றம் நடைபெற ஊக்கமளித்தார். புத்தகங்கள் எழுதுவது அவருக்கு கைவந்த கலை.

வெளிவந்த நூல்கள். ரங்கநாயகியின் காதலன் (சரித்திரக்குறுநாவல்.) தமிழ்கேட்க ஆசை (கட்டுரைத்தொகுப்பு.) இந்திய ஞானிகளின் ஆன்மிக சிந்தனைகள் (தத்துவ ஆய்வுநூல்.) வெளிவர இருப்பவை. நெஞ்சு நோகாத நாட்களில்லை. (கவிதைத்தொகுப்பு) அவள்ஒரு காவியம் (ஆலங்கேணிக்கிராமமண் வாசனை நிறைந்த குறுநாவல்.) சொல்லும்செயலும். (சிறுகதைத்தொகுப்பு) தம்பலகாமம் மகாவித்தியாலயத்தில் தரம்5 வரை கல்விபயின்ற ஐயா பல்கலைவிற்பனர், ஆர்மோனிய வித்துவான், நாடகநடிகர், சிவபக்தராக இருந்தார்.

கடைசிகாலத்தில் கனவில் காட்சியளித்த பகவான் சத்திய சாயி பாபாவைக் கண்டு வணங்கி பாபாவின் பக்தருமானார். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்.' என்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் வாக்குப்படி கமத்தொழிலையே தனது தொழிலாகக் கொண்டுவாழ்ந்தார்.

பேசுவதற்கும் பழகுவதற்கும் இனியவர். கஸ்டப்படுகிறவர்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்வார். புத்திமதிகளும் ஆலோசனைகளும் கூறுவார். ஐயாவுக்கு மூன்று ஆண்பிள்ளைகள் மூன்று பெண்பிள்ளைகள். ஆண் பிள்ளைகளில் ஒருவர் காலமாகிவிட்டார் மற்றப் பிள்ளைகள் எல்லோரும் கல்வி கற்று தொழில் பெற்று நல்லாயிருக்கிறார்கள். 'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு' 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்.'திருக்குறள், 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் வேண்டா நமக்கும் அது வழியே நாம் போமளவும் எமக்கென்னென்று இட்டு உண்டு இரும்' நல்வழி ஔவையார்.

ஐயாவின் பிரிவால் வருந்தும் மனைவி மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் சகோதரர்கள் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஆறுதல் அடையவும் ஐயாவின் ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போம்.இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

**பொ.கந்தையா காந்தி ஆசிரியர்.**
முத்துக்குமார சுவாமி கோவிலடி,
திருக்கோணமலை, 22.05.09





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# மூதறிஞர் கனகசபை வேலாயுதம் ஐயா அவர்கள் மீது எனக்கு ஏற்பட்ட அதிர்வுகள்.

திருக்கோணமலை என்னும் கோணேசர் பூமியில், வயலும் வயல் சார்ந்த தம்பலகாமம் என்னும் மருத மண்ணில், குஞ்சடப்பன் திடல் என அழைக்கப்படும் அழகிய கிராமத்தில், வேலாயுதம் ஐயா அவர்கள் 93 ஆண்டுகளுக்கு முன்பு (1917) வந்துதித்தார். மூதறிஞர் வேலாயுதம் ஐயா அவர்கள் தனக்குள் தானே வளர்த்துக்கொண்ட கற்பனை வளங்களை கிராமிய வளர்ச்சிக்கு அழகிய தமிழ் மொழி மூலம்கவிதையாகவும் கட்டுரையாகவும் தமிழ் பேசும் மக்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும்வண்ணம் இலக்கியம் சிறுகதை போன்றவற்றை குமுத பக்தி இதழ் வீரகேசரிப் பத்திரிகை அண்மையில் வெளிவந்த வெளியீடுகள் ஆகியவற்றினூடாக வெளிப்படுத்தினார்.

வீரகேசரிப் பத்திரிகைக்குத் தனது ஆக்கங்களை எழுதியது மாத்திரமின்றி அப்பத்திரிகை நிருபராகவும் சிறப்பாகக் கடமையாற்றி இருந்ததால் ஐயா அவர்களை "வீரகேசரி வேலாயுதம்" என மக்கள் அழைக்க ஆரம்பித்தனர். இவர் ஒரு சிவ பக்தன். தம்பலகாமம் ஆதி கோணேசர் மீது இவர் பாடிய கோணேசர் பதிகம் இவரது இறுதிக்கிரியையின் போது அன்பர் ஒருவர் பாடியதை நான் நேரில் கேட்டேன். மிக அழகான சொற்களும் ஆழ்ந்த கருத்தும் ஆதிகோணேஸ்வரரின் புகழை உச்சியில் உயர்த்தி நின்றது. சமய சார்பற்ற இவர் தனது இறுதிக் காலத்தில் பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவைத் தெய்வமாக ஏற்றுக் கொண்டார். கனவுகளில் பாபாவும் அவரது தொண்டர்களும் தரிசனம் அளித்ததைத் தனது பிள்ளைகளுக்கும் ஏனையோருக்கும் அடிக்கடி கூறியுள்ளார்.

இறுதியாக வேலாயுதம் ஐயா அவர்களைச் சில மாதங்களுக்கு முன்னர் அவர் புத்தகம் வெளியிட்ட பொழுது சந்தித்தேன். தனது தள்ளாடும் வயதில் கூட இறுதிக்கால கட்டத்தில் இவ்வாறான தொண்டினை மேற்கொள்ளும் பொழுது இவரது இளமைக் காலத்தில்........நினைத்துப்பார்க்கவே முடியவில்லை. இவரது ஆத்மா சாந்தியடையும் வண்ணம் எல்லாம் வல்ல பகவான் சத்ய சாயி பாபாவை வேண்டி நிற்கிறேன்.

**வெங்கையா சுந்ரலிங்கம்,**
தலைவர்,
ஸ்ரீ சத்யசாயிபாபா சேவாநிலையம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்கூறும் நல்லுகினுக்குப் பேரிழப்பு

"இந்த மண்ணுலகம் இறைவன் படைத்துவைத்த மேடை. இந்த உலகம் என்னும் நாடகமேடையில் மாமனிதர்கள் தோன்றி நடித்து வியத்தகு சாதனைகள் புரிந்து காலத்தால் மறையாத காரியங்கள் பல ஆற்றியுள்ளனர். உண்டு உடுத்து உறங்கி இதுதான் வாழ்க்கை என்று பெரும்பாலானோர் கிடைத்தற்கரிய மனித வாழ்க்கையைப் பாழ் செய்தாலும் கணிசமானவர்கள் தாங்கள் இந்த உலகத்தில் பிறந்ததற்குத்தொண்டாக உலக முன்னேற்றத்துக்கு உகந்த முறையில் கடனாற்ற வேண்டியது நியதியாகும்" என தம்பலகாமம் தந்த தமிழறிஞர் அமரர் கனகசபை வேலாயுதனார் தனது 'இந்திய ஞானிகளின் தெய்வீகச் சிந்தனைகள்' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உலகத்தில் உள்ள அனைத்து உயிருள்ள உயிரற்ற பொருட்கள் யாவும் பிரம்மத்தின் கூறுகள்தாம்.இதனை அவரே பிரமத்தை விளக்குவதற்குப் பல உதாரணங்ளைத் தந்து இராமகிருஷ்ண பரமஹம்சர் நரேந்திரன் என்னும் சுவாமி விவேகானந்தருக்கு சொல்லிய 'நானும் பிரம்மம் நீயும் பிரம்மம் இந்தச் சுவர் கூடப் பிரம்மத்தின் ஒரு பகுதிதான்' என விளக்குகிறார். தமிழறிஞர் அமரர் கனகசபை வேலாயுதனார் எவ்வளவு பெரிய மேதை என்பதை இவரது நூல்களை வாசிப்பவர்கள் உணர்ந்து கொள்வார்கள் தமிழறிஞர் அமரர் கனகசபை வேலாயுதனார் தம்பலகாமம் தந்த பெரும் பொக்கிசம்.

அவர் இவ்வுலகில் தொண்ணூற்றிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து தமிழ்த்தொண்டாற்றியவர். எந்த நேரமும் கொடுப்பில் ஒரு குமிண்சிரிப்புக் குடிகொண்டிருக்கும் இறக்கும் வரை இலக்கியங்களைக் கற்பிப்பதிலும் ஆக்குவதிலும் தம் வாழ்நாட்களைப் பயனுடையதாக ஆக்கியவர்.

நமது சமுதாயம் அறிஞர்கள் உயிருடன் இருக்கும்போது போற்ற மறந்து விடுகிறது. முதுமை பொல்லாதது இந்த ஆன்மாக்களுக்கு இளைஞனாக எழுதிக் கொண்டிருந்தவர். அழகன் முருகன் கையிலுள்ள வேலாயுதம் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் அற்புதமான ஆயுதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமம் தந்த தமிழறிஞர் அமரர் கனகசபை வேலாயுதம் தமிழை எழுதிக்காக்கும் வேலாயுதம். அவரது புகழை அவரது மகன் கவிஞர் வே.தங்கராசா அவர்கள் 'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை என்னோற்றான் கொல்' என்பதற்கேற்ப செயற்பட்டு அவரது ஆக்கங்களை வெளிக்கொணர்ந்து காட்டுகிறார்.

தமிழறிஞர் அமரர் கனகசபை வேலாயுதனாரின் இழப்பு தமிழ்கூறும் நல்லுலகினுக்குப் பேரிழப்பாகும். பிறப்பு என்று ஒன்றிருந்தால் இறப்பும் இருக்கும். இந்த நியதியை யாராலும் 'மாற்றமாம் வையகத்தில்' மாற்றமுடியாது நாம் சட்டையை மாற்றுவதுபோல் இந்த ஆத்மா கட்டையை மாற்றிக்கொள்கிறது அவ்வளவுதான்.

அன்னாரின் ஆக்கங்களை வெளிக்கொண்டு வருவதுதான் அவருக்கு ஆற்றும் தொண்டாகும். அவர் என்றென்றும் தமிழ்கூறும் நல்லுலகத்தில் வாழ்வார் அன்னாரின் ஆத்மசாந்திக்காய் இறையைப் பிரார்த்திக்கும் இவன்

**கேணிப்பித்தன் ச.அருளானந்தம்.**
முன்னாள் கல்விப்பணிப்பாளர்
வ.கி.மா. கல்வித்திணைக்களம்
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்தவர்

நல்ல மனிதரைக் காண்பதுவும் அவர்களுடைய சொல்லைக் கேட்பதுவும் அவர்களோடு உறவாக தோழமையாக இருப்பதுவும் நலமான செயல் என்கின்ற மூதுரைக்கேற்ப வாழ்ந்து மறைந்த திருகோணமலை மாவட்டத்தின் மூத்த பத்திரிகையாளரும், நாடறிந்த இலக்கியவாதியும், வரலாற்று ஆய்வாளரும், கவிஞருமான, தம்பலகாமம் க. வேலாயுதம் அவர்களின் மறைவானது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். தனது அறிவு எழுத்தாற்றலினால் பல்லாயிரக்கணக்கான தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

எளிய மொழிநடை, வாசகர்களை ஈர்க்கும் ஆற்றல், அன்னாரால் படைக்கப்பட்ட அத்தனை நூல்களும் சான்று பகர்கின்றன. திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் அன்னாரது அந்திமக்காலத்தில் தம்பலகாமம் குளக்கோட்டன் வித்தியாலயத்தில் கௌரவித்ததைப் பெருமையாகக் கருதுகிறது. அவரது ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றேன்.

**ஏ. எல். றபாய்தீன்,**
தலைவர்,
திருகோணமலை மாவட்ட
ஊடகவியலாளர் சங்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகச் செய்தி

வரலாற்றுப் பாரம்பரியமிக்க தம்பலகாமத்தில் உள்ள குஞ்சடப்பன் திடலில் பிறந்து தொண்ணூற்றியிரண்டு வருடங்கள் அங்கேயே ஆனந்தமாக வாழ்ந்து இறைவனடி சேர்ந்த பெரியார் ஸ்ரீ க. வேலாயுதம் அவர்களின் வாழ்வு பல பரிமாணங்களைக் கொண்டது. ஆன்மிகம், இலக்கியம், இயல்,இசை,நாடகம் பத்திரிகைத் துறை என்பவற்றில் இவரது ஆளுமை மிக்க செறிவாற்றலை பலரும் புகழ்ந்து போற்றுவர். விசேடமாக விமர்சனத் துறையில் இவரது ஆழமான பார்வை பலரையும் சிந்திக்கத் தூண்டியது என்பது வெள்ளிட மலை. இவரது சிந்தனையில் வெளியாகிய எத்தனையோ எண்ணக் கருக்கள் அவரது எழுத்துக்கள் மூலமாகப் பரவி பலரது வாழ்க்கை வழி காட்டலாக அமைந்திருந்தது.

அவை பல. அவற்றுள் ஒன்று, உதாரணமாக 'இந்திய ஞானிகளின் தெய்வீக சிந்தனைகள்' என்ற அவரது நூலின் முதலாவது அத்தியாயத்தில் தன் கூற்றாக 'மனித குலத்தின் நலன் கருதிச் சான்றோர்கள் எவ்வளவு முயன்றாலும் தீமை அநீதி என்ற கொடும் செயல்கள் காலமாற்றத்தினால் கூட அழிந்தொழியாமல் அந்தக் காலத்திலும் இந்தக் காலத்திலும் சிரசீவித் தன்மையுடன் இருந்து வருவது மனித சமுதாயத்திற்குள்ள சாபக்கேடாகும்' மேற்கூறிய எண்ணக்கரு ஆன்மிகப்பாதையை ஆழமாக சிந்திக்க வைக்கிறது. இன்றைய கலியுகத்தில் ஆன்மிகப் பெரியார்கள் அவதாரபுருஷர்கள் எமக்கு எவ்வளவு தான் ஆன்மிகப் போதனைகளைச் செய்தாலும் எம்மை நாமே உணர்ந்து எமக்குள் இருக்கும் எமது தெய்வீகத்தை உணர்வதின் மூலம் வெளியிலிருந்து வரும்.

இன்பங்களையும் துன்பங்களையும் சமமாகக் கருதும் தெய்வீக ஆற்றலை எம்மால் பெறமுடியாது தவித்துக் கொண்டிருக்கிறோம் எனவே எம்மை வெளியிலிருந்து வரும் எந்த இன்பதுன்பமும் பாதிக்காமல் அவைகளைச் சமனாக ஏற்கும் எமது ஆன்மிக ஆற்றலை நாம் வளர்த்தெடுப்பதின் மூலமே இன்றைய காலகட்டத்தில் அமைதியுடனும் சாந்தியுடனும் வாழலாம் என்பதே வேலாயுதம் ஐயா தரும் ஆன்மிக செய்தியாகும் இதுவே இன்றைய கால கட்டத்தின் தேவையுமாகும்.

**சாயிராம்**

**திரு. நா. புவனேந்திரன்**
பிரதிச்செயல், திட்டஅதிகாரி,
நெக்கொட்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றமும் மறைவும்

பிரபஞ்ச நியதிப்படி கர்ம விளைவுகளை அனுபவிக்க ஜீவர்கள் உலகில் மீண்டும் மீண்டும் தோன்றி மறைகின்றனர். தமது வாழ்க்கையில் உலகம் தம்மை மகிழ்விக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் வாழ்கின்ற மனிதர்களே அநேகர். ஆனால் ஒருசிலர், தாம் செய்த நல்வினைப்பயனாக சத்வ குணம் மேலோங்கிய நிலையில், சுயநலம் என்ற வட்டத்தைத் தாண்டி, பரந்த மனப்பாங்குடன் பல நற்பணிகளைச் செய்கின்றனர்.

மனிதரை நேசிக்க முடியாத ஒருசிலர் எப்படிக் கடவுளை நேசிக்க முடியும். உருவமும் உணர்வுமுள்ள மனிதரை நேசிக்கும் ஒருவர் உள்ளும் புறமுமாக உருவமற்று அருவமாக உள்ள பரம்பொருளையே நேசிக்கிறார் என்பது தான் எல்லா மதங்களும் கூறும் பேருண்மையாகும்.அந்த வகையில் மறைந்த கனகசபை வேலாயுதம் ஐயா அவர்கள் தனது எழுத்தாற்றலால் தன் கிராமமாகிய தம்பலகாமத்திற்கு பல நன்மைகளைச் செய்ததோடுகவிதையாற்றலைப்பயன்படுத்தி தமிழ் சமுதாயத்திற்கு பல நல்ல கருத்துக்களையும் தந்துள்ளார்.

அவருடைய ஆக்கங்களை வீரகேசரி மித்திரன் ஆகிய பத்திரிகைகள் வெளியிட்டு ஊக்கப்படுத்தியமை அவருடையஆற்றலுக்கு சான்றாகும் இவருடைய ஆக்கங்கள் சிறந்த இலக்கியக் கவிதையென இந்தியக் கவிஞர்களுடைய பாராட்டையும் பெற்றுள்ளன. அவரது படைப்புகளை நூலுருவில் தர நூல் வெளியீடு என்ற நற்பணி செய்யும் அவரது மகன் திரு வே. தங்கராஜா அவர்கள் முயற்சிப்பார் என்று நம்புகிறேன். கனகசபை வேலாயுதம் ஐயா அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறேன்.



**டி. குலவீரசிங்கம்,**
வடமாகாண பிரதம செயலாளரின்
இணைப்புச் செயலாளரும்,
முன்னாள் உதவி அரசாங்க அதிபரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதச் செயலே அவனியின் இயக்கம்

ஊதியம் கருதா ஒரு தொழில் நடக்குது
ஆதியில் நடந்த அவனியின் இயக்கம்
வேதனை கஸ்டம் விம்மல்கள் மகிழ்ச்சி
சோதனை பலவாய்த் தோன்றியதுலகம்.

❖❖❖❖❖

நீருடன் மண்ணும் நிறைந்த இவ்வுலகம்
ஆரிதை ஆக்கினான் என்பதற்கான
காரணம் ஏதும் கண்டு சொல்லொண்ணா
பேரதிசயமாயத் பிறந்தது உலகம்.

❖❖❖❖❖

உலகினைப் படைத்து ஒரு தொகை உயிர்கள்
உலவிடச் செய்த ஒருபெரும் சக்தி
மலை கடல் ஆறு மனிதர்கள் கூட்டம்
பலவிதமான உருவினில் உயிர்கள்.

❖❖❖❖❖

காலையில் சூரியன் உதிப்பதும் பின்பு
மாலையில் ஆதவன் மறைவதும் இரவில்
பால் நிலவுதித்துப் படுவதுமான
வேலைகள் யாவும் விதி தவறாமல்

❖❖❖❖❖

பிறப்பதும்உயிர்கள் பிழைத்திருந்திங்கு
இறப்பதுமாக இயங்கிடும் ஓர் நிலை
திறமுடன் இவைகளைச் செய்திடும் ஒருவன்
மறைந்திருக்கும் மர்மம் யார் அறிவார்?

❖❖❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனிதைச் செய்கிறான் இதனால் அவனுக்கு
தனக்கென இலாபம் உண்டெனக் கருதி
அனைத்தையும் ஆக்கினான் என்று நாம் கருத
தினையளவேனும் சான்றுகள் இல்லை.

❖❖❖❖❖

மற்றவர் கண்டு பாராட்டலுக்கும்
உற்றவோர் தகையை உடையவரில்லை
கற்றவராலும் கணித்திட முடியா
அற்புதச்செயலே அவனியின் இயக்கம்

❖❖❖❖❖

படைப்பின் இரகசியம் பகர்வதற் கொண்ணா
விடையற்ற கேள்வியாய் விளங்கலைக் காண்போம்
கிடைத்ததற்கரிய பௌதீக அறிவியல்
திடமாக அதனைத் தெரிவிக்கக் காணோம்

❖❖❖❖❖

அறிவினில் சிறந்த அறிஞர்களாலும்
பொறியியல் புலமை உடையவராலும்
சிறிதளவேனும் செகத்தின் இயல்பை அறிந்து
சொல்வதற்கு ஆற்றலுமில்லை

❖❖❖❖❖

பிரபஞ்சம் எங்கும் பொருள்களில் நிறைந்த,
பேராற்றலுள்ள ஒரு பெரும் சக்தியின்,
திருவிளையாடலே உலகம் உயிரென, பிரமத்தை
உணர்ந்த ஞானிகள் புகல்வர்.

❖❖❖❖❖



தம்பலகாமம் க.வேலாயுதம்
(நன்றி மித்திரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் ஆத்மா உயர்வு பெறும்

தம்பலகாமத்து வேலாயுதம் ஐயா - இத்
தரணியை விட்டு நீர் மறைந்ததும் மெய்யா?
அம்பல மானதுன் கலையுலகச் சேவை - இனி
அழியுமோ அருள் நிறையுன் இலக்கியச்சோலை.

வீரகேசரியின் மூத்த செய்தியாளனே!
வேண்டும் போதெல்லாம் எழுதிக் குவித்தவனே!
வரலாற்றுக்குறுநாவல் தந்தவனே!
வளமான உன் தமிழ் கேட்க ஆசை!

தம்பையூர் தளைத்திடப் பல வழிகளிலும்
தனியனாய்ப் போர்க் கொடி நிமிர்த்தி நின்ற
எந்தையே! எழுதுருப் பணிகள் செய்தாய்
எம்மையேன் மறந்து விட்டு பயணமானாய்?

செய்திகளோடு திறனாய்வுதக் கட்டுரைகள்
சிறுகதை நாவல் கவிதை என்று
எழுதியே உன் வாழ்வை நிறைவு செய்தாய்
என்றுமே உமை மறவோம் எழுச்சி கொள்வோம்.

"வீரகேசரி வேலாயுதம்" என்று மக்கள்
விருப்புடன் உமையழைக்கும் விபரம் கேட்டு
உளம் மகிழ்ந்தோம் உத்தமரே உங்கள் ஆத்மா
உயர்வு பெறும் அல்லாவும் உடனிருப்பான்.



எம். ஜே. அன்வர்அலி
சுதந்திர ஊடகவியலாளர்
கந்தளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்

"தெளிந்த ஓட்டமும் வேகமும் சிருஷ்டித் திறனும் மிக்க எழுதுகோலிலிருந்து நாம் எதிர் பார்க்கக் கூடியவற்றிற்கு ஒரு எல்லையும் உண்டோ" இந்தக் கூற்று மறைந்த எழுத்துலகவேந்தர் அமரர் தம்பலகாமம் க. வேலாயுதம் அவர்களுக்குப் பொருத்தமான ஒன்றாகும். அவர் பல துறைகளிலும் எழுதிக் குவித்தவை ஏராளம். சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஆரம்பித்தது அவருடைய எழுத்துப் பயணம். தமது பிரபலியத்தைக் கருத்தில் கொள்ளாது அவ்வப்போது முகிழ்க்கும் சிந்தனைகளை எழுத்துருவாக்குவது அவர் பெற்ற ஆத்ம திருப்தியாகும். இவ்வாறு எழுத்துருப் பெற்றவை நூலுருப்பெற வேண்டுமென அவர் விரும்பியிருந்தார்.

பொருளாதாரக் குறைவு,பிரசுரவசதியற்ற நிலமை, போன்ற தடைகள்பல ஆக்கங்கள் முடங்கிக்கிடக்க காரணங்களாயின. இவற்றில் பெரும்பகுதி ஆக்கங்கள் வன் செயலாலும் கந்தளாய்க் குள உடைப்பு போன்ற அனர்த்தங்களாலும் சிதைந்து அழிந்தன. இதனை உளம் நொந்து பல தடவைகள் என்னிடம் கூறியுள்ளார். அவரோடு பலநாட்கள் பலமணிநேரங்கள் நான் உரையாடியிருக்கிறேன் ஒவ்வொருதடவையும் ஒவ்வொருதுறைபற்றிய தீர்க்கமான வடிவத்தை மனதில்பதிய வைத்து விடுவார்.

அப்படி பதிய வைத்த துறைகளில் ஒன்று எனக்கும் பெருமை சேர்த்த கர்நாடக சங்கீதமாகும். அமரர் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்கள் அடிப்படையில் சங்கீத பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்.இளம் வயதிலே நாட்டுக்கூத்து அனுபவங்களைப் பெற்றவர். நாட்டுக்கூத்துப் பழக்கிய அண்ணாவிமார்கள் மூலம் கர்நாடக சங்கீத இராகங்களை இனம் கண்டு கையாளும் திறனைப் பெற்றிருந்தார். இதற்கு எனது தந்தையாகிய திரு.க. கணபதிப்பிள்ளை அண்ணாவியாரும் ஒரு தூண்டு கோலாக இருந்திருக்கிறார் என்பதை அவரே கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது 'ரங்கநாயகியின் காதலன்' என்னும் அரிய வரலாற்று நாவலில் வரும் ரங்கநாயகியை ஒரு கர்நாடக சங்கீதப் பாடகியாகக் படைத்துள்ளமை அவருக்கிருந்த சங்கீதப் பற்றுக்குச் சான்று பகருவதாக அமைந்துள்ளது. ரங்கநாயகி - உதயன் காதலர்கள் மூலம் இவர் தான் அனுபவித்து பயின்ற இராகங்களை குறிப்பிட்டிருப்பது இவருக்குள்ள சங்கீத ஈடுபாட்டைப் புலப்படுத்துகிறது. ஒருநாள் அவரோடு உரையாடும் போது கர்நாடக சங்கீதத்தைப் பற்றி குறிப்பிட்டது இப்போதும் எனது நினைவில் பதிந்துள்ள ஒரு விடயமாகும்.

நுண்கலைகளுள் கர்நாடக சங்கீதம் சிறப்பானது. ஆலமரத்தைப் போல அது அரிதாகப் பயிராகக் கூடியது. ஆலமரத்தை விதைத்துப் பயிராக்க முடியாது. பறவைகளின் எச்சத்தின்மூலம் பழைய கட்டிடங்களிலும், கோயில் கோபுரங்களிலும் கூட அது முளைக்குமே தவிர வேறு விதத்தில் விதை மூலம் பயிராக்க முடியாது. சிறந்த நுண் கலையான சங்கீதமும் அருமையாக அடிப்படையுள்ளவர்களிடம் மட்டும் வெளிப்படக் கூடியது. இத்தகைய சங்கீதக் கலை நமது, கிராமத்தில் வளர நமது முன்னோர்களான அண்ணாவிமார்களைப் பின்பற்றி பாடுபட வேண்டும். எனக் கேட்டுக்கொண்டார்.

அவரது குரல் எனது செவிகளில் இப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது இத்தகைய ஒரு எழுத்துச் சித்தரின் எண்ணங்கள் ஈடேற நமது கிராமத்து மக்கள் எழுத்துக் கலையைப் போற்றுவோம். சங்கீதக்கலையை வளர்த்தெடுப்போம். இவ்வாறு உறுதிபூண்டு தம்பலகாமம் க. வேலாயுதம் என்னும் அறிஞனின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திப்போம்.



**கலாபூசணம் திரு.க. சண்முகலிங்கம்**
புதுக்குடியிருப்பு,
தம்பலகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தம்பலகாமத்தில் பாதுகாக்கப் படவேண்டிய அரிய பொக்கிஷம் வேலாயுதம் அவர்கள்.**

கேரளப் பல்கலைக்கழக பேராசிரியர்.
புலவர் சத்திய மூர்த்தி.

**தம்பலகாமத்தில் ஒரு பெரிய பொக்கிஷம் உண்டு, அதைப்பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு உங்களுடையது. நான் குறிப்பிடுவது எங்கள் வேலாயுதத்தை.**

திரு. எஸ். நடராசப்பிள்ளை
வீரகேசரி பிரதம ஆசிரியர்

**தம்பலகாமம் க.வேலாயுதம் ஐயா மட்டுமல்ல அவரது ஆக்கங்களும் கூட காலங்காலமாக பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்களாகும்.**

ஆனந்தா ஏ. ஜி. இராசேந்திரம்

**அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய பேரறிஞர் தம்பலகாமம் வேலாயுதம் அவர்களுக்கு திருகோணமலை வாழ் மக்கள் சார்பில் முத்தமிழ்வித்தகர் என்ற பட்டத்தைச் சூட்டுகிறேன்.**

Dr.வை சோமாஸ்கந்தக்குருக்கள் சித்த
ஆயுர்வேத அக்யூபஞ்சர் வைத்திய ஆய்வாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரஞ்சீவிதமான சிந்தனையாளன்

தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். அவர் மிகச் சிறந்த சிந்தனையாளனாக, ஞானியாக, பத்திரிகையாளனாக, ஆற்றல் மிகு எழுத்தாளனாக, புலமைத்துவம் கொண்ட ஒரு குடும்பத்தின் தலைவனாக அர்த்தபுஷ்டியான வாழ்க்கையை வாழ்ந்து தம்மையும் இவ்வுலகையும் சிறப்பித்துள்ளார். இன்று அவர் அமரத்துவம் எய்தியபோதிலும் அவரது எழுத்துக்களும், சிந்தனைகளும் சிரஞ்சீவிதமானவை பிரபஞ்சம் பற்றி மிக ஆழமாக அவர் சிந்தித்திருக்கின்றார். பிரபஞ்சத்திற்கும் உலக வாழ்க்கைக்குமிடையிலான தொடர்புகள் பற்றி காத்திரமான கருத்துக்களை அவர் உருவாக்கிச் சென்றுள்ளார்.

மறைந்து கிடக்கும் அவரது எழுத்துக்களும் சிந்தனைகளும் தேடித்தொகுக்கப்படவேண்டும் உலக மக்களின் நல்வாழ்வுக்காக அவை நூல்களாகப் பதிப்பிக்கப்படவேண்டும். அமரர் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது மிகப்பெரிய ஆன்மதிருப்தியைத் தருகின்றது. அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவன் அருள்பாலிப்பானாக.

**சி.வன்னியகுலம்**
தகவல் கல்வி தொடர்பாடல் நிபுணர்
(நேர்ப் திட்டம்) முன்னை நாள் பணிப்பாளர்
இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சி தமிழ்ப்பிரிவு
சிரேஷ்ட செய்திப்பதிப்பாசிரியர் வீரகேசரி பத்திரிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலம் விசாரித்து
நாடிய சுகம் போய்ச்சேருமுன்பே.........
நாவலர் மறைந்த மாயம் என்ன?

நான் பிறந்த மண்ணில்
அம்மா சொன்ன தகவல்கள்.......
ஆவலாய் அறிய முன்பு
ஆறுதல் தேடி ஆவி பிரிந்ததென்ன?

ஆவி பிரிந்திட்டாலும்.....
ஆற்றிய தொண்டு மறையாதய்யா......
தேடிய செல்வங்களிலும் சிறப்பாய்......
தமிழை வளர்த்தாய் தரணி எங்கும் உன் புகழ்மங்காதய்யா.....

உடலை மட்டும் பிரிகின்றோம்.......
உணர்வால் எழுதிய எழுத்துக்கள் உயிராய்......
உள்ளத்தால் நாளும் நாமும் மதிக்கிறோம்........
ஐயா உங்கள் பாதங்களுக்கு தொலைதூரத்திலிருந்து
கண்ணீர் மலர்களால் தொழுது பிரார்த்திக்கின்றேன்.

**தனிமதி கனடா**
www.nilamathy.blogspot.com

முதுபெரும் எழுத்தாளரும் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் அதிகாலை.காம் இணையதளத்தில் இலக்கியத் தொடராய் வாராவாரம் பிரசுரமாகும் "ரங்கநாயகியின் காதலன்" குறுநாவலின் ஆசிரியருமான ஈழ எழுத்தாளர் மேதகு தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்கள் இயற்கை எய்திய செய்தியை ஏற்கனவே அதிகாலையில் வெளியிட்டிருந்தோம். அன்னாரின் இழப்பு தமிழ் இலக்கிய உலகில் ஓர் ஈடுசெய்ய முடியாத இழப்பு. அவரைப்பிரிந்து வாடும் அன்னாரின் குடும்பத்தாருக்கு அதிகாலை வாசகர்களின் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஆசிரிய நண்பர்கள்**
**http://www.adhikaalai.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறு அமைதி கொள்ளும்?

பைந்தமிழ் மொழியில் வல்ல
பாவலா! தம்பை தந்த
செந்தமிழ் போற்றும் எங்கள்
தீந்தமிழ் கவிஞர் கோனே!
எத்தையே தமிழை உன்றன்
இறையெனப் போற்றி வாழ்ந்த
சிந்தையை எண்ணி நாங்கள்
வியப்பினில் ஆழ்வதுண்டு

கற்றதோ கைமண் அளவு
காவியம் ஆக்கும் திறனை
பெற்றதோ எவ்வா றென்றறியாப்
பிதற்றுவர் உம்மை அறியார்
வாசிக்கும் திறனே உன்றன்
வளர்ச்சிக்கு உந்து கோலாம்
நேசிக்கும் தமிழைப்போற்றி
நெஞ்சினில் நிறைந்தாய் ஐயா!

ஆதியாம் கோணை நாதன்
அன்பனாய் நீடு வாழ்ந்தாய்!
பதிகமும் பாடி ஈசன்
பக்தனாய் மகிழ் ந்திருந்தாய்!
ஊதியம் கருதா தென்ற
உணர் வுயர்க் கவிதையாலே
இயற்கையின் நுட்பங்களை
எடுத்து நீ இயம்பினாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று நாவல் மற்றும்
வளமுறு சமூக நாவல்
இதயத்தை வருடிச் செல்லும்
இதமான சிறு கதைகள்
சுவையான கவிதை நூறு
தொடரான கட்டுரைகள்
இவையாவும் தந்த எங்கள்
இறைவா நீ ஏன் பிரிந்தாய்?

தொண்ணூற்றி யிரண்டகவை
தொல்லைகள் எதுவுமின்றி
பண்ணோடும் பசுமையான
பல்கலைத் துறைகளோடும்
கண்போல எம்மைக் காத்த
காவலா உன் பிரிவை
எண்ணியே எங்கள் நெஞ்சம்
எவ்வாறு அமைதி கொள்ளும்?

வே. தங்கராசா
ஓய்வுபெற்ற அதிபர்
**http:// thanganila. blogspot. com**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன வேதனை தரும் இழப்புச்செய்தி. நான் சார்ந்த நிலத்தின் மூதறிஞர் இழப்பினை கனத்த மவுனத்துடன் மரியாதையுடன் உள்வாங்கிக்கொள்கிறேன். தலைமுறைகள் பல தாண்டி தனது எழுத்துக்களை இணையத்திலும் கண்டுவிட்ட பெருமை அன்னாரது. உங்களுடனும் உறவினருடனும் தம்பலகாமத்தின், திருக்கோணமலையின் மக்களுடனும் வருத்தத்தைப் பகிர்ந்துகொள்கிறேன்.

**மு. மயூரன்**
திருக்கோணமலை.

தமிழ் பதிவர்கள் சார்பாக... வருத்தத்தைப் சமர்பிக்கிறேன்!!

**கலையரசன்**
வடலூர், தமிழ்நாடு

தம்பலகாமம் என்னும் மண்ணை விரும்பிய ஒரு மனிதனின் இறப்பு மிகவும் துயர் தருவதாக இருக்கின்றது,வீரகேசரியில் இனி ஒரு போதும் அவரை காணமுடியாது. உறவினர்களுக்கு ஆழ்ந்த கவலைகளை தெரிவித்துகொள்கின்றோம்.

**Surendran Vithyaramanan**
**Tamilnadu, : India**

தமிழிற்கும் சைவத்திற்கும் பெருந் தொண்டாற்றிய அன்னாரது இழப்பு தமிழ் உலகிற்கே மாபெரும் இழப்பு. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்

**Dr.Renuka Srinivasan**
**University of East London '08**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## அமரர் திரு க. வேலாயுதம்

எங்கள் இதயக் கமலத்தில் வீற்றிருக்கும் அமரர் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமதில்லம் வந்து எம்முடன் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, மின்னஞ்சல், வலைப்பூக்கள், பதாதைகள், மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதி யாத்திரையில் பங்கு கொண்டு எமது துக்கத்தில் பங்கு கொண்டோருக்கும், 31ம் நாள் கிரிகைகளில் பங்கு கொண்டோருக்கும், இது தொடர்பான துயரச் செய்திகளை எமக்கு மனமுவந்து தந்தவர்களுக்கும், நினைவு மலரை திறம்பட அச்சிட்டு வழங்கிய பதிப்பகத்திற்கும், மேலும் பல உதவிகளை நல்கியோருக்கும், எங்கள் நன்றிகள் உருத்தாகுக.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"



குஞ்சப்பன்திடல்,
தம்பலகாமம்.

இவ்வண்ணம்
மனைவி, பிள்ளைகள்,
விழுதுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கின்றதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Jeya Offset Printers : 0777271478

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org